

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் 23.02.2025 முதல் 28.02.2025 வரை மலேசியா நாட்டிற்கு கல்விச் சுற்றுலா சென்றுள்ள 52 அரசுப்பள்ளி மாணவர்கள், மலேசிய தோட்டத் தொழிலாளர் குழந்தைகளுக்காக 1928ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வரும் SJKT Ladang Coalfields தமிழ்வழிப் பள்ளியினை பார்வையிட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் சிறப்பிதழ்!

**நாளை வெளிவருகிறது!**



**‘திராவிட மாடல்’ ஆட்சியின் முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட நாயகர், மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் சிறப்பிதழ் நாளை (மார்ச் – 1) ‘முரசொலி’ நாளிதழுடன் வெளிவருகிறது!**

### தொகுதி வரையறை தென் மாநிலங்களைப் பாதிக்கும்! அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு முதல்வர் அழைப்பு!

# கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராகச் செயல்படுகிறது பா.ஜ.க.!

### போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டி!

அரியலூர்,பிப்,28-

அரியலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நாடாளுமன்றதொகுதி வரையறையால் தமிழ்நாட்டுக்கு ஏற்பட போகும் தீங்குகள் குறித்து தமிழகத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட கட்சிகளோடு கலந்து பேசுவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மார்ச் 5ஆம் தேதி அன்று அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி இருக்கிறார்கள் இது ஒரு மிக முக்கியமான தமிழ்நாட்டினுடைய எதிர்காலத்தை பாதிக்கக்கூடிய செய்தி என்பதால் முதல்வர் மிகுந்த கவனத்தோடு இந்த கூட்டத்தை கூட்டியிருக்கிறார்கள் ஒன்றிய அரசு ஏற்கனவே தமிழகத்தின் மீது ஒரு வஞ்சிக்கும் மனப்பான்மையோடு செயல்பட்டு வருவது எல்லோரும் அறிவோம்.

சமீபத்திய உதாரணத்துக்குச் சொல்ல வேண்டும் என்றால் புதிய தேசிய கல்விக் கொள்கையை ஏற்காவிட்டால் தமிழ்நாட்டிற்கு நிதியை தர முடியாது என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் மிக ஆணவமாக பேசியதை கண்கூடாக பார்த்தோம் அவர்களுடைய அடுத்த வெளிப்பாடாகத் தான் இந்த தொகுதியை மறுசீரமைப்பு என்பது அமையும் என்பது திராவிட முன்னேற்ற கழகத்தின் கருத்து அதனால் தான் அதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம்.

இந்த தொகுதி மறுவரையறை என்பது கடந்த காலங்களிலும் நடந்திருக்கிறது 1951, 1961, 1971 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை நடைபெற்றிருக்கிறது அப்பொழுது எல்லாம் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை மறுபடியும் மறு சீரமைப்பு செய்வது என்ற பணி நடைபெற்றிருக்கிறது முதலில் 7 லட்சம் வாக்காளர்களைக் கொண்டது ஒரு தொகுதி என்றும் பிறகு 8 லட்சம் வாக்காளர்களைக் கொண்டது ஒரு தொகுதி என்றும் அதற்கு பிறகு 10 லட்சம் வாக்காளர்களைக் கொண்டது ஒரு தொகுதி என்றும் அவை சீரமைக்கப் பட்டன அப்படி சீரமைக்கப்பட்ட காரணத்தால் முதலிலேயே மிக குறைவான எண்ணிக்கையில் இருந்த அந்த எண்ணிக்கை தற்போது 543 ஆக உயர்ந்திருக்கிறது 543 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ள சூழலில் நாம் 39 நாடாளுமன்ற தொகுதிகளோடு இருக்கின்றோம்.

தென்னிந்தியாவினுடைய பிரதிநிதித்துவம் 26 சதவீதம் என்ற அளவிலே இருக்கிறது ஆனால் இவர்கள் இப்பொழுது மீண்டும் மக்கள் தொகை அடிப்படையிலே இந்த மறுசீரமைப்பு என்று கொண்டு வந்தால் தென்னிந்தியாவினுடைய பிரதிநிதித்துவம் மிகவும் குறைந்து போகும் தமிழ்நாட்டுடைய எண்ணிக்கை குறைந்து போகும் எனவேதான் நாம் இதனை வன்மையாக எதிர்க்கின்றோம்

**மக்கள் தொகையை கட்டுப்படுத்தாத வட மாநிலங்கள்!**

தமிழ்நாட்டை விட முன்னேறிய நிலையில் இருந்த பிகார் உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்கள் மக்கள் தொகையை கட்டுப்படுத்தாத காரணத்தினால் மக்கள் தொகை மிகவும் பெருக்கெடுத்து அங்கே இப்பொழுது வளர்ச்சி என்பது மிகவும் குறைவாக இருக்கிறது தமிழகம் முன்னே வந்திருப்பதற்கு காரணம் இந்த மக்கள் தொகையை பெருக்கத்தை கட்டுப்படுத்தியதும் ஒரு முக்கியமான காரணம் எனவே இந்த மக்கள் தொகை பெருக்கத்தை நாம் அன்றைக்கு கட்டுப்படுத்தியது போல பக்கத்தில் இருக்கின்ற தென் மாநிலங்களும் அதிகளவிற்கு முனைப்போடு செயல்பட்டு கட்டுப்படுத்தினார்கள் இன்றைக்கு அப்படி ஒரு நல்ல நடைமுறையை கையில் எடுத்து நல்லாட்சியை வழங்கியதற்கு தண்டனை என்பது போல நமக்கு மக்கள் தொகை குறைந்து இருக்கிறது எனவே உங்கள் தொகுதிகள் குறையும் என்கின்ற செய்தியை அவர்கள் தெரிவித்து வருகிறார்கள் இது ஒரு கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது.



அதனால்தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி இருக்கின்றார்கள் ஏன் தமிழகத்தில் மாத்திரம் உங்கள் குரல் ஓங்கி ஒலிக்கிறது என்று நீங்கள் எல்லோரும் கேட்கலாம் எப்பொழுதெல்லாம் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரான குரல் ஓங்கி வருகிறதோ அப்போது தமிழகம் தான் எதையும் முன்னெடுக்கும் இந்தியை திணிக்கின்ற போது தமிழகம் தடுத்து நிறுத்தி இரட்டை மொழி என்று கொண்டு வந்த காரணத்தினால் நாம் இன்றைக்கு தாய்மொழியை தமிழ் மொழியை காப்பாற்றி இருக்கின்றோம் அதேபோலத்தான் நீட் தேர்வு எதிர்ப்பிலும் எந்த மாநிலமும் அதனுடைய ஆபத்தை உணராத நேரத்தில் முதன்முதலாக குரல் கொடுத்தது தமிழ்நாடு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தான்.

இன்றைக்கு பக்கத்தில் இருக்கின்ற மாநிலங்கள் எல்லாம் நீட் தேர்வு குறைபாடு கொண்டது என கூறி அவர்களும் நீட் தேர்வுக்கு எதிரான குரலை ஒலிக்கிறார்கள் அதேபோன்று தான் இந்த பிரச்சனையும் இது மெல்ல மெல்ல உணர்ந்து மற்றவர்களும் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் இருந்தாலும் பாஜக இதிலே மிகுந்த தீவிரத்தோடு முனைப்போடு செயல்படுவதால் உடனடியாக இதற்கு எதிர்ப்பை காட்ட வேண்டியது தான் இந்த அனைத்து கட்சி கூட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டி இருக்கின்றார்கள் ஏற்கனவே நம்முடைய கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரான செயல்பாடுகள் பாஜக

முன்னெடுப்பதை நாமெல்லாம் அறிவோம்.

நம்முடைய மருத்துவக் கல்வி நம்முடைய உரிமையாக இருந்தது நீட் தேர்வை கொண்டு வந்து அவர்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டு போய் விட்டார்கள். இப்பொழுது மற்ற இளங்கலை படிப்புகளை நுழைவு தேர்வு கொண்டு வருவதற்கான நடவடிக்கையில் இறங்கி இருக்கிறார்கள் அதேபோல நம்முடைய இரு மொழிக் கொள்கை எடுத்து விட்டு மும்மொழி கொள்கையை திணிப்பதற்கு புதிய கல்விக் கொள்கையை நாம் கடைபிடிக்க வேண்டும் என்று இப்பொழுது வற்புறுத்தி வருகிறார்கள் இன்னொரு புறம் நம்முடைய பொருளாதாரத்தை அவர்கள் எப்படி சீர்கெடுத்து வருகிறார்கள் என்பதை அறிவோம் நம்மிடத்தில் வசூல் செய்யப்படுகின்ற பணத்தில் ஜிஎஸ்டி வரியில் நமக்கான உரிய பங்கீடு திருப்பி தராமல் இருக்கிறது ஒரு ரூபாய் வசூலித்தால் 29 பைசா தான் நமக்கு தராங்க ஆனால் பீகாரருக்கு 7 ரூபாய் தருகிறார்கள் உத்தர பிரதேசத்திற்கு 2.75 திருப்பி தருகிறார்கள் முறையாக ஒரு வளர்ந்த நாடாக நாம் இருந்து நாம் கொடுக்கின்ற வரிப்பணத்தை அவர்கள் வளராமல் அலட்சியமாக இருந்துவிட்டவர்களுக்கு எடுத்து கொடுப்பது என்பது ஒரு தவறான செயல்

இப்படி ஏற்கனவே நம்முடைய உரிமைகளை பறித்து நம்முடைய பொருளாதாரத்தை சுரண்டி நம்முடைய கலாச்சாரத்தை அழிக்கின்ற வகையில் இந்தி மொழி திணிப்பு போன்ற பல்வேறு நடவடிக்கையில் எடுத்து வருவதன் அடுத்த கட்டமாக நம்முடைய அதிகாரத்தையும் குறைப்பதற்கான நடவடிக்கையாக இது அமையும் இந்த செயல் அவர்கள் தொடர்ந்தால் நம்முடைய பிரதிநிதித்துவம் குறையும் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்து அந்த அவையை நடத்த விடாமல் பல நேரங்களில் திணறடித்தது அவர்களுக்கு எதிர் சவாலாக இருந்தாலும் இவற்றையெல்லாம் புறக்கணித்து சில சட்டங்களை அவர்கள் இயற்றி வருவதை நாம் அறிவோம். இன்னும் அந்த பிரதிநிதித்துவம் குறைந்தால் நாம் குறளற்றவர்களாக மாறி போவோம். எந்த விதத்திலும் நம்முடைய குரலை அங்கே ஒழிக்க முடியாத ஒரு சூழல் ஏற்பட்டுவிடும் எனவே ஆபத்தை எல்லோரும் உணர வேண்டும் இது தலைக்கு மேல் தொங்கும் கத்தி என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பலமுறை திரும்பத் திரும்ப கூறியிருக்கிறார்கள்.

இதற்காக கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானமும் கொண்டு வந்திருக்கிறார்கள் இதை வைத்து பாஜகவுக்கு எதிரான அரசியல் செய்கிறார்கள் என பாஜகவினர் சொல்ல முனைவார்கள். அண்ணாமலை சொல்வார் அவருக்கு நாங்கள் சொல்லிக் கொள்ளவது நாங்கள் கடந்த ஆண்டு இது குறித்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றோம். எனவே இப்பொழுது ஒட்டுமொத்தமாக எல்லோரும் சேர்ந்து குரலை எழுப்ப வேண்டும் என்பதற்கு தான் இந்த கூட்டம் சுவர் இருந்தால் தான் சித்திரம் தமிழ்நாடு இருந்தால் தான் யார் ஆட்சி நடத்துவது என்பது அதனால் தமிழ்நாடு இருக்க வேண்டும் தமிழ்நாட்டினுடைய அதிகாரம் இருக்க வேண்டும். ஒன்றியத்தில் நம்முடைய அதிகாரம் சற்றும் குறைந்து விடக்கூடாது எனவே தான் இந்த கருத்தை வலியுறுத்தி இந்த கூட்டம் கூட்டப்படுகிறது

தொகுதி மறு வரை எவ்வாறு செய்யப்பட உள்ளது என நினைக்கிறீர்கள் என்ற கேள்விக்கு மக்கள் தொகை அடிப்படையில் மறு சீரமைப்பது என்ற கணக்கில் வந்தால் தமிழ்நாட்டுடைய எண்ணிக்கை குறையும் இன்னொரு திட்டம் வச்சிருக்காங்க மக்கள் தொகையை அதிகப்படுத்தினால் உத்தர பிரதேசம் நம்மை விட கூடுதலாக பெற்று விடுவார்கள் இந்த இரண்டு விதத்தில் எந்த கணக்கை போட்டு அவர்கள் கொண்டு வந்தாலும் இந்துத்துவா மாநிலங்களைக் கொண்டு அவர்கள் ஆட்சிக்கு வந்து விட முடியும்.

**அமித்ஷா பேச்சு நம்ப முடியாதது!**

தொகுதி சீர்மைப்பால் தமிழ்நாட்டிற்கு எந்த ஒரு தொகுதியும் குறையாது என்ற அமித்ஷாவின் கருத்துக்கு தமிழ்நாட்டைப் பற்றி ஏற்கனவே நாம் எவ்வளவோ குரல் கொடுத்தும் துச்சமாக மதித்து பேசுகிறவர்கள் அதே நிலைப்பாடுதான் செய்வார்கள். இப்பொழுது இன்றைக்கு அமித்ஷா சொல்லி இருப்பதும் எதுவும் முழுமையான பதில் அல்ல அவர்கள் ஒரு மேம்போக்கான ஒரு பதிலை சொல்லி இருக்கிறார். எண்ணிக்கை குறையாது என்று ஏற்கனவே இவர்களைப் பற்றி நாம் நாடறிந்த ஒரு விஷயம்.

எந்த செயலையும் எப்பொழுது வேண்டுமானாலும் செய்வார்கள் திடீரென்று ஒரு இரவு நேரத்தில் ரூபாய் நோட்டு மதிப்பு செல்லாது என்று அறிவித்தவர்கள் தான் இந்தியாவில் ஒரு முக்கியமான மாநிலம் காஷ்மீர் என்று இருந்ததை துண்டாடி யூனியன் பிரதேசம் என்று அறிவித்தவர்கள் தான் ஜிஎஸ்டி என்ற வரி விதி எந்த விதத்திலும் எந்த வியாபாரிடத்திலும் கேட்காமல் திணித்து நினைத்த நேரத்திலெல்லாம் அதுல கூட்டிக் கொண்டே போகின்றவர்கள் தான் இவர்கள் எனவே இவர்கள் சொல்லுக்கும் செயலுக்கும் என்றைக்கும் ஒரே நிலையில் இருக்க மாட்டார்கள். அவர்கள் இந்த சொல்லைச் சொல்லலாம் நாடாளுமன்றத்தில் சொன்னதையே மாற்றி செய்யக் கூடியவர்களாக இருக்கிறவர்கள் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது தான் நம்முடைய கடமை

தமிழ்நாடு மாத்திரம் அல்ல தென் மாநிலங்கள் அத்தனைக்கும் இதே நிலைதான். தென் மாநிலங்களில் தொகுதிகளை குறைத்துவிட்டு வட மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது தான் அவர்களுடைய ஒற்றை நோக்கம் அதை செய்ய தான் அவர்கள் முனை வார்கள். அவர்களுடைய இலக்கான ஒரே நாடு ஒரே தேர்தல் ஒரே மதம் ஒரே மொழி என்ற அந்த நிலையை நோக்கி தள்ளுகின்ற ஒரு வழிமுறைதான் இதுவும்.

**அனைவரும் ஒன்றிணைவோம்!**

இதற்கு எதிராக அனைத்து மாநிலங்களையும் ஒருங்கிணைக்கும் செயலில் தமிழ்நாடு முதலமைச்சர் ஈடுபடுவாரா என்ற கேள்விக்கு தமிழ்நாட்டில் அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைக்கின்ற இந்த நடவடிக்கை துவங்கியிருக்கிறது தமிழகம் ஒற்றைக் குரலாக இதை எதிர்த்து ஒலிக்கின்ற பொழுது மற்றொருவர் திரும்பி பார்ப்பார்கள் இதனுடைய வீரியத்தை உணர்வார்கள் இதனுடைய ஆபத்தை உணர்வார்கள் அந்த நேரத்தில் அவர்களையும் ஒருங்கிணைக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது யாரெல்லாம் இதன் மூலம் பாதிக்கப்பட இருக்கிறார்கள் அவர்களையும் ஒருங்கிணைத்து இந்த செயல்பாட்டை நாம் ஓங்கி ஒலிக்க வேண்டும் நாம் மாத்திரமல்ல பக்கத்தில் இருக்கின்ற கேரளா, ஆந்திரா, தெலுங்கானா கர்நாடகாவுக்கும் இந்த பாதிப்பு இருக்குது. இன்னும் சொல்லப்போனா மகராஷ்டிராவுக்கும் இந்த பாதிப்பு இருக்கிறது அவர்களும் மக்கள் தொகையை குடும்ப கட்டுப்பாட்டு மூலமாக மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்தியவர்கள் எனவே எல்லா மாநிலங்களுக்கும் இந்த செய்தி சேர வேண்டும். அவர்களும் நம்மோடு ஒன்றிணைந்து ஒருங்கிணைந்து போராட வேண்டிய சூழலை ஏற்படுத்த வேண்டும்.

**வீரியம் தெரியாதவருக்கு விளக்க வேண்டியதில்லை!**

குடும்பக் கட்டுப்பாட்டை சிறப்பாக செயல்படுத்தியதால் தான் தொகுதி மறுவறையில் தொகுதி குறையும் என நினைக்கிறீர்களா என்ற கேள்விக்கு

ஒரு மக்கள் நலனுக்காக மக்கள் தொகை பெருக்கம் அதிகரித்தால் வளர்ச்சி வீதம் குறையுது என்ற காரணத்தினால் மக்கள் தொகை கட்டுப்படுத்த வேண்டும் என்று ஒன்றிய அரசு அன்றைக்கு மாநில அரசுகளோடு சேர்ந்து எடுத்த நடவடிக்கையை மிகத் தீவிரமாக நாம் முன்னெடுத்தோம். தீவிரமாக முன்னெடுத்த காரணத்தினால் மக்கள் தொகை கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கிறது. அப்படி கட்டுப்பாட்டுக்கு வந்த காரணத்தினால் தான் நாம் இன்றைக்கு அனைவருக்கும் கல்வி என்கின்ற இலக்கை எல்லாம் நிர்ணயித்து செல்கின்ற ஒரு இடத்தில் இருக்கின்றோம் அப்படிப்பட்ட சூழலில் ஒரு நல்லாட்சி நடத்தியதற்கு தண்டனையாக தான் இது பார்க்கப்படுகிறது அதனால் நாம் இதை கடுமையாக எதிர்க்கின்றோம் எனக்கு கூறினார் . மும்மொழிக் கொள்கையில் திமுகவும் பாஜகவும் நாடகமாடுவதாக விஜய் கூறியுள்ளது குறித்த கேள்விக்கு இதன் வீரியம் தெரியாதவர்களுக்கு அதை பேசுவதற்கு நான் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

### காரைக்கால் ஏ.எம்.எச். நாஜிம் தாயார் மறைவு!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!**

*சென்னை,பிப்.28-*

*முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:*

*காரைக்கால் மாவட்டத் தி.மு.க. அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச். நாஜிம் அவர்களின் தாயார் திருமதி. நபிசா உம்மாள் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.*

*அன்புகாட்டி, அரவணைத்து, ஆளாக்கிய அன்புத்தாயாரை இழந்து தவிக்கும் நாஜிம் அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.*

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா! ஏ.சரவணன் தலைமை!

## திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றியத்தில் பொதுக்கூட்டம்!

**க.சுந்தர் எம்.எல்.ஏ.– எழும்பூர் கோபி– எஸ்.டி.இசை – யாசர் அராபத் சிறப்புரை!**

*காஞ்சிபுரம், பிப்,28,*

*காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், திருக்கழிக்குன்றம் தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் கழகத் தலைவர்,முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் 28.2.2025 வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு லட்டூர் ஊராட்சியில் நடைபெறுகிறது.*

*ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.சரவணன் தலைமை வகிக்கிறார்.வி.என். மதன்,பி.கே.சகாதேவன்,எஸ்.புண்ணியகோட்டி ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர். ஏ.சீனுவாசன்,பி.எஸ். பாஸ்கர்,ஏ.தாமோதரன்,யுதமயந்தி,சி.எஸ்.பாபு, த.கயல்மாரிமுத்து,வி.கே.தமிழ்மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.,எஸ்.டி.இசை,எழும்பூர் கோபி, யாசர் அராபாத், ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர். மேலும் க.செல்வம் எம்.பி., ஆர்.டி.அரசு, ப.அப்துல்மாலிக், ஆர். விஜயகுமார்,வி.டி.வீரராகவன், எம். கலாவதி நாகராஜன், ஆர்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, எம்.சந்திர சேகர்,வி.இ. பாபு,ஆர்.விஜயமோகன், த.உதயதுல்லா, சொ.வெங்கடேசன்,என். ஜெயபிரகாஷ்,வி.சி.சரண் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஒடுகத்தூர் ஆர். நடராசன்

**பிப்ரவரி 28 (2009)**



**கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து கிளை, பேரூர், ஒன்றியம் ஆகிய அமைப்புகளின் செயலாளராகப்பொறுப்பேற்று கழகப் பணியாற்றிய இவர். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் செய்து கொண்டார்.**

**மூன்று முறை பொதுக்குழு உறுப்பினராகவும், ஒரு முறை மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**ஒடுக்கத்தூர் பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று 14 முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். காத்தவராயன்

**பிப்ரவரி 28 (2020)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.**

**ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**பேர்ணாம்பட்டு நகர்மன்றத் தலைவராகவும், 2019ல் நடைபெற்ற குடியாத்தம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் பணியாற்றி அவர்கள் நன்மதிப்பைப்பெற்றவர்.**

**கழகம் அறிவித்த சட்டநகல் எரிப்புப்போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**